விபீஷணன் சரணாகதி

(நாடகம்)

प्रज्ञानं ब्रह्म

இயற்றியவர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

விபீஷணன் சரணாகதி

(நாடகம்)

இயற்றியவர்
ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115
எலமனூர் ரயில்வே ஸ்டேஷன், திருச்சி ஜில்லா.
1979

தபோவனத் தொடர் 107

முதற்பதிப்பு 1979

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
காரியதரிசியால் பிரசுரிக்கப்பட்டது.

விலை ரூ. 1-50

தபோவன அச்சுப்பள்ளி, திருப்பராய்த்துறை.

விபீஷணன் சரணாகதி

காட்சி 1.

இராவணனுடைய மந்த்ராலோசனை

இராவணன் : "எவ்வளவு எச்சரிக்கையாகக் கொசு வலை கட்டி வைக்கப்பட்டிருந்தாலும் அதனுள் ஏதேனும் ஒருவிதத்தில் இரண்டொரு கொசுக்கள் நுழைந்து விடுகின்றன. தூங்குகிறவனைத் தூங்க வொட்டாது உபத்திரவப்படுத்துகின்றன. அந்த உபத்திரவத்தை யாருமே நெருக்கடியென்று நவிலுவதில்லை. அந்தக் கொசுவுக்கு நிகர் இலங்கையினுள் நுழைந்த குரங்கு. சமாளிக்கமுடியாத தீங்கு எதையும் அதுசெய்துவிடவில்லை. அக்குரங்கு பண்ணிய நஷ்டங்கள் நமக்குப் பொருளற்றவை. ஒருவேளை அந்த வானரமானது சிறையில் வைக்கப்பட்டிருக்கிற சீதையைக் கண்டுபிடித்திருக்கலாம். அவளோடு பேச்சுவார்த்தையும் நிகழ்த்தியிருக்கலாம். இச் சம்பவங்களைப்பற்றி நீங்கள் கருதுவது யாது?"

மந்திரி 1: "மூன்றுவுலகுக்கும் வேந்தே! நிகழ்ந்து போன இந்த அற்பச் செயலைக் குறித்து நாம் மனம் கலங்கலாகாது. பயங்கொள்ளித்தனத்துக்கும், அரக்கர் கூட்டத்திற்கும் வெகுதூரம். லங்காபுரியில் நிகழ்ந்த நஷ்டத்துக்கு ஈடு ஏற்கனவே செய்தாகி விட்டது.

மந்திரி 2: " வேந்தர்களுக்கெல்லாம் வேந்தே! சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அந்தப் பெண்ணை ஒருவேளை மரங்களில் வசிக்கும் அந்த மந்தி பார்த்திருக்கக்கூடும். அச்செயலை முன்னிட்டும் நமக்குப் பாதகம் ஒன்றும் வர மாட்டாது."

இராவணன் : " நம் சாம்ராஜ்யத்தில் ஆட்சிமுறை எங்ஙனம் நடைபெற்று வருகிறது ?"

மந்திரி 1: "அரசே! ஆட்சி முறையைப்பற்றி ஐயம் எதற்கு? சூரியன், சந்திரன், வருணன், வாயு ஆகிய தேவர்கள் நம் ஆணைக்கு அடிபணிந்து நடக்கிறுர்கள். பருவத்தில் அளந்தெடுத்து மழை பெய்கிறது. நிலமகள் நம்முடைய ஆதிக்கத்துக்கு உட்பட்டவளாக விளைவை வாரி வழங்கிக்கொண்டிருக்கிறுள். பசிப்பிணிக்கும், இலங்காபுரிக்கும் வெகுதூரம். அவுணர்களாகிய நாம் யாண்டும் இன்புற்றிருப்போமாக."

விபீஷணன் : "அண்ணு என்னைமன்னியுங்கள். நான் காணும் காட்சி வேறு, இந்த அமைச்சர்கள் காணும் காட்சி வேறு. அரசன் முன்னிலையில் இச்சகம் பேசி அரசனை இன்புற்றிருக்கச் செய்வதே இவர்களின் தொழில். தங்களுடைய நலனில் யாண்டும் கருத்து வைத்துள்ள நான் சொல்லக்கிடக்கும் விஷயம் ஒன்று உண்டு. ஒரு குரங்கு நம் நாட்டினுள் நுழைந்து நிகழ்த்திய கஷ்ட நஷ்டம் இவ்வளவு அவ்வளவு அன்று.

அதை நாம் அலட்சியப்படுத்தலாகாது. வானர சேனையுடன் ராமன் எதிர்க்கரைக்குப் படையெடுத்து வந்தாயிற்று என நான் கேள்விப்படுகின்றேன். பகல்கனவு காண்பது போன்று நாம் வீண்பொழுது போக்கலாகாது.''

இராவணன் : "தம்பீ, நீ சொல்லுவதில் பொருள் இருக்கிறது. ஆயினும் நீ பிறவியிலேயே பயங்கொள்ளி. சிறிய இக்கட்டுக்களையெல்லாம் உயிருக்கு ஆபத்து ஆகக் கருதுபவன் நீ. அது இருக்கட்டும். மந்திரிமார்களே! அதிவிரைவில் மந்த்ராலோசனைக்குரிய சபையைக் கூட்டுங்கள். மந்திரிமார்களும் சேனாதிபதிகளும் ஆகிய பிரமுகர்கள் எல்லாரும் வந்து சேருவார்களாக. தம்பி கும்பகர்ணன் பெருந்தூக்கத்தினின்று எழுந்திருக்கும் காலம் இன்னும் வரவில்லை. ஆகையால் அதற்கேற்றமுறைகளைக் கையாண்டு அவனையும் எழுப்பி சபைக்கு அழைத்து வருவீர்களாக.

(சபை கலைகிறது)

காட்சி 2.

இராவணனோடு விபீஷணன் தனியாக உரையாடல்.

இராவணன் : "இதுகாறும் நான் அபகரித்துக் கொண்டு வந்துள்ள மடந்தையர்களெல்லாம் எனக்கு வசப்பட்டு உள்ளார்கள். இந்தச் சீதை மட்டும் அடம் பிடிக்கிருள். ஆயினும் என் கைக்கு எட்டியவளை நான் கைநழுவவிடப் போவதில்லை. நான் அழிந்து பட்டுப்போவதாயிருந்தாலும் அவளை விடேன்."

விபீஷணன் வந்து தமையன் முன்னிலையில் வீழ்ந்து வணங்குகிருன்.

விபீஷணன் : "அண்ணு! இதுகாறும் நான் தங்களை எதிர்த்து ஒரு வார்த்தை பேசியது கிடையாது. பணிவுடன் தங்களிடம் விண்ணப்பிக்கிறேன். சற்று நிதானமாக என் சொல்லுக்குச் செவி சாயுங்கள். நம் நாடு எப்பொழுதுமே ஸ்ரீ லங்கையாக இருந்து வருகிறது. ஆனல் தாங்கள் இந்தச் சீதையைச் சிறைபிடித்துக் கொண்டு வந்த நாள் முதல் இலங்காபுரியின் மங்களக் காட்சிகளனைத்தும் அலங்கோலமாக மாறுபட்டு வருகின்றன. கேட்டுக்குரிய சகுனங்களே எங்கும் தென்படுகின்றன."

இராவணன் : "அடே சிறுவா! நீ கோழை. நீ பீதி அடைந்து இருப்பதால் பார்ப்பதெல்லாம்

உன்னை பயமுறுத்துவது போன்று தோன்றுகிறது.''

விபீஷணன் : ''தேவே! தாங்கள் அப்படிச் சொல்ல வேண்டாம். நான் கண்டு வருகிற இதே அபசகுனக் காட்சிகளை அறிவு படைத்துள்ள பெருமக்கள் பலர் கண்டு வருகின்றனர். அவர்களுடைய கருத்துக்களைத் தங்களிடம் தெரிவிக்க அவர்கள் அஞ்சுகின்றனர். உங்களை நான் கெஞ்சிக் கேட்கின்றேன். மேலும் வருவதற்கு இருக்கும் கேடுகளைச் சற்று எண்ணிப் பாருங்கள்.''

இராவணன் : ''என்னதான் கேடு வரப்போகிறது, எடுத்து இயம்பு பார்க்கலாம்.''

விபீஷணன் : ''தங்களுக்கு முன்னெச்சரிக்கை பண்ணுவதற்குக் கேவலம் ஒரு குரங்கு வந்து செய்த செயல்களைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.''

இராவணன் : (கடகடவென்று சிரிக்கிறான்) ''பேடிப் பயலே, நீயா எனக்குத் தம்பியாக வந்து பிறந்துள்ளாய்.''

விபீஷணன் : ''மைந்தன் அக்ஷனை இழந்தது போதாதா? இது நகைப்புக்குரிய விஷயமா? நீங்களே சொல்லுங்கள்.''

இராவணன் : ''மடையா! உனக்கும் இராக்ஷச இயல்புக்கும் வெகுதூரம். மக்களைப் பறிகொடுத்து விட்டு மானுடர் என்னும் பிராணிகள் சதா

கதறிப் பதறி அழுதுகொண்டு இருப்பார்கள். அரக்கர் கூட்டத்துக்கும் அத்தகைய அழுகைக்கும் வெகுதூரம்.''

விபீஷணன் : "நம்முடைய குல தெய்வத்துக்குரிய கோயிலை இந்தக் குரங்கு ஒரு குத்தில் பாழாக்கியதே அதை அபசகுனம் என்று சொல்லாது வேறு எப்படி வியாக்யானம் பண்ணுவீர்கள்?"

இராவணன் : "அன்று அழிந்துபோன கோயிலை அதிவிரைவில் புதுப்பித்தாயிற்று. அது நம் வீரத்துக்கு அறிகுறி. எவ்வுலகிலும் யாருக்குமே நாம் வணங்கோம்.''

(இராவணன் வீரச் சிரிப்பு சிரிக்கின்ருன்)

விபீஷணன் : "அந்த அற்பக் குரங்கு தங்கள் முன்னிலையில் அச்சம் ஏதும் அறியாத பாங்கில் நின்றுகொண்டு வாலி அழிந்துபட்டுப்போன போக்கைப் பற்றிப் பேசியதே. அப்பொழுது உங்கள் உள்ளத்தில் வீர உணர்ச்சி கிளம்பிற்ரு அல்லது விதிர்விதிர்ப்பு உண்டாயிற்ரு? மேலும் ஒன்றும் நான் சொல்லவேண்டியதில்லை.''

இராவணன் : "அடே பயங்கொள்ளிப் பயலே! பறந்து ஓடிப்போ. என் முன்னே நிற்காதே.''

விபீஷணன் : "உங்களுக்கு நலம் உண்டாகுக.''

(என்று சொல்லிக்கொண்டு போகிருன்.)

காட்சி 3.

கும்பகர்ணனை உறக்கத்தினின்று எழுப்புதல்

ஏவலாளன் 1: "இளையராஜாவாகிய கும்பகர்ணன் உறங்குவது ஐந்து மாதம். எழுந்திருந்து காரியங்கள் பார்ப்பது ஒரு மாதம். இது அவருடைய ஒரு அலாதி போக்கு. இப்பொழுது படுக்கைக்குப் போய் மூன்று மாதங்கள்தான் ஆகின்றன. இன்னும் இரண்டு மாதங்கள் பாக்கி இருக்கின்றன. பிற்பகுதியில் தான் அவருடைய உறக்கம் ஆழ்ந்தது. அப்படியிருக்க அவரை எழுப்புவது எப்படி?"

ஏவலாளன் 2: "அனாவசியமாகத் தூக்கத்தினின்று அவரை எழுப்பக்கூடாது என்பது அவருடைய உத்தரவு."

ஏவலாளன் 3: "ஆனால் நமது பெரிய மகாராஜாவின் உத்தரவு ஓர் அவசர காரியமாக அவரை இப்பொழுதே எழுப்பியாக வேண்டும் என்பது."

ஏவலாளன் 1: "நாம் தர்மசங்கடத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறோம். எழுந்தவுடன் இளைய ராஜா சீறி விழுவார். அப்படி சீறி விழுந்தால் நாம் தொலைந்தோம்."

ஏவலாளன் 2: "வருவது வரட்டும். உடனே இவரைத் தட்டி எழுப்ப முயல்வோம்."

(கும்பகர்ணனுக்குப் பக்கத்தில் வருகிறார்கள். அவனுடைய குறட்டை இடி இடித்தாற்போல் இருக்கிறது.)

(நாலைந்து பேர் கூடிக்கொண்டு கூப்பாடு போடு கிருர்கள்.)

ஏவலாளர்கள்: "வேந்தே! விழித்தெழுந்திரும், அவசர காரியம்." (இது மூன்று தடவை)

(கும்பகர்ணன் அசைந்தானல்லன். ஏவலாளர்கள் மீண்டும் உரையாடுகின்றனர்.)

ஏவலாளன் 1: "முக்கியமான ஒரு காரியத்தை நாம் நிறைவேற்றவில்லை. விழித்தெழுந்தவுடன் இளைய ராஜாவுக்குப் பசியும், தாகமும் அளவு கடந்ததாயிருக்கும்."

ஏவலாளன் 2: "அடேயப்பா, நல்லவேளைக்கு நீ ஞாபகப்படுத்தினுய். ஓர் அண்டா உணவும், இரண்டு அண்டா மோரும் ஆயத்தப்படுத்துவோம்."

ஏவலாளன் 3: "அன்னமும், பானமும் ஆயத்தமாய்க் கொண்டிருக்கிறது. நாம் தொண்டை வெடிக்கக் கத்தினுலும் இந்த இளவரசர் எழுந்திருக்க மாட்டார். கொம்பு, தம்பட்டம், காளம் ஆகியவைகளைக்கொண்டு இடி இடித்தாற் போன்று ஓசையைக் கிளப்புவோம்." (அது நிகழ்கிறது. ஆயினும் கும்பகர்ணன் அசைந்த பாடில்லை.)

ஏவலாளன் 1: "நம் இளையராஜா தூங்குகிற பொழுது கல்; விழித்து எழுந்திருக்கிறபொழுது ஊழித்தீ; தெளிவடைந்திருக்கிற பொழுது

ஏதோ சில காரியங்களுக்கு உதவுவார். இந்த இக்கட்டைச் சமாளிப்பது எப்படி?"

ஏவலாளன் 2: "அண்ணே! கல் என்று சொன்னாயே அது உண்மை. கட்டடம் கட்டுகிறபொழுது கல்மேல் கல் வைப்பதற்கு ஏற்றவாறு கல்லைச் சம்மட்டியால் தட்டிச் சரிப்படுத்துகிறோம். இந்தக் கும்பகர்ண இளவரசைத் தூக்கத்தினின்று எழுப்புவதற்கு வேறு வழியில்லை. ஏதேனும் ஒருபோக்கில் கல்போன்ற அவருடைய உடலைத் தாக்கியாக வேண்டும்."

ஏவலாளன் 3: "ஆம் அண்ணே! அதுதான் சரியான வழி. நாம் ஒரு பத்துப்பேர் கூடிக்கொண்டு உலக்கைகளை எடுத்துக் குத்துவோம். தாளம் போடுவதுபோன்று குத்துவோம். மத்தளம் அடிப்பதுபோன்று தட்டுவோம். இதைத் தவிர வேறு வழியில்லை.

(குத்துகிறார்கள், திம் திம் தகடதிம், என்று மூன்று தடவைசொல்லிக்கொண்டு)

கும்பகர்ணன் அசைகிறான். ஏவலாளர்கள் எட்ட ஓடுகின்றார்கள். எழுந்து உட்கார்ந்து உரக்க ஒரு கொட்டாவி போடுகிறான். உடலை நெளிந்து கொடுக்கிறான்.

கும்பகர்ணன்: "யாரடா அங்கே?"

ஏவலாளர்கள்: தேவதேவா, இதோ வந்து விட்டோம்."

கும்பகர்ணன் : "அடே, உணவு எங்கே?"

ஏவலாளர்கள் : "வேந்தே, இதோ வைத்திருக்கிரும்."

கும்பகர்ணன் கவளம் கவளமாக எடுத்து விழுங்குகின்ருன்.

கும்பகர்ணன் : "கொண்டு வா பானம்."

ஏவலாளன் : "ஐயனே, இதோ கொண்டு வந்து விட்டோம்."

குடம் குடமாக மோர் வாயினுள் போகிறது. கும்பகர்ணன் பலத்த ஏப்பம் போடுகிருன்.

கும்பகர்ணன் : "எதற்காக என்னை இவ்வளவு சீக்கிரம் எழுப்பினீர்கள்?"

ஏவலாளன் 1: "யாரோ எதிரிகள் நம் நாட்டின் மீது படையெடுத்து வருகிருர்களாம்."

ஏவலாளன் 2: "அதற்காக நம்முடைய ராஜாதி ராஜன் இராவண வேந்தன் ஓர் அவசர சபை கூட்டுகிருர்."

ஏவலாளன் 3: "அந்தச் சபைக்குத் தாங்களும் எழுந்தருளவேண்டும் என்பது மாட்சிமை தங்கிய மன்னனுடைய ஆணை."

கும்பகர்ணன்: "ஓ இதுதான, இலங்காபுரியின் மீது படையெடுத்து வரத்துணிந்துள்ள உயிர்வகைகள் உலகில் உண்டா? அவர்களை நசுக்கித் தள்ளிவிட்டுத் தமையனிடம் போகலாமா?"

ஏவலாளன்: "இல்லை அரசே, எதிரிகள் எங்கே இருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியாது. மந்த்ராலோசனை முடிந்த பிறகே நடவடிக்கை எடுக்கப்படும். ஆதலால் தாங்கள் முதலில் ராஜசபைக்கு வாருங்கள்."

காட்சி 4.

இராவணனுடைய மந்த்ராலோசனை சபை

சிம்மாசனத்தின் மீது இராவணன் படாடோபமாக வீற்றிருக்கிறான். மந்திரிப் பிரதானிகள் அவரவர் அந்தஸ்திற்கேற்ற ஸ்தானங்களில் அமர்ந்திருக்கின்றனர். அரசன் சபையை ஆரம்பித்து வைக்கிறான்.

இராவணன்: "தண்டகவனத்தில் வசித்து வந்த அழகியாகிய சீதையைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். அவள் மீது மையல் பூண்டு தந்திரமாக நான் அவளை அபகரித்து வந்திருக்கிறேன். ஆனால் என்னுடைய காதலுக்கு அவள் இன்னும் இணங்காதிருக்கிறாள். எக்காரணத்தைக் கொண்டும் நான் அவளை இராமனிடம் திருப்பித் தரப்போவதில்லை. நம்முடைய அஜாக்கிரதையினால் மூர்க்கனாகிய ஒரு முரட்டுக்குரங்கு இங்கு வந்து அமர்க்களம் பண்ணியிருக்கிறது. சுக்ரீவனும், இராமனும் படையெடுத்து வந்துகொண்டிருக்கிறார்கள் என நான் கேள்விப்படுகிறேன். அவர்களை ஒழித்துத்தள்ளும் உபாயத்தை நாம்

கையாளவேண்டும். அவரவர் அபிப்ராயங்களைத் தெரிவிப்பீர்களாக.''

அகம்பனன் : "வேந்தே, நான் ஓர் அவசரச் செய்தி கொண்டு வந்திருக்கிறேன். கோபித்துக் கொண்டு என்னை மாய்த்துவிடமாட்டீர்களானல் நான் கண்டதைக் கண்டபடியே கூறுகிறேன்.''

இராவணன் : "தயங்கவேண்டாம். நமக்குப் பயன்படுகிற செய்தியைக் கொண்டுவருபவனை நாம் ஏன் தண்டிக்க வேண்டும்?''

அகம்பனன் : "கடலின் எதிர்கரையில் வானர சேனை மற்ருெரு கடல்போன்று காட்சி கொடுக்கிறது. நான் மறைந்திருந்து அதைப் பார்த்தேன். கிஷ்கிந்தைக் கோமானுகிய சுக்ரீவன் அதற்குத் தலைமை வகிக்கிருன். பந்தாடுவது போன்று வானரங்கள் மலைகளைத் தூக்கிக் கொண்டுவந்து கடலில் போட்டு அணை கட்டுகின்றன. அதிவேகமாக அந்த வேலை நடைபெறுகிறது. இன்னும் சில நாட்களில் அக் குரங்குக் கூட்டம் இலங்காபுரிக்குள் புகுந்துவிடும். உடனடியாக நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது விஷயத்தில் நாம் இனிமேல் பராமுகமாக இருக்கலாகாது.''

கும்பகர்ணன் : "ஒரு விஷயத்தை இந்த அவையின் கண் நான் எடுத்துரைக்கிறேன். அறிவாளி

ஆகிய அரசன் ஒருவன் ஆலோசனை பண்ணிச் செயலில் ஈடுபடுகிறான். ஆனால் அண்ணா! தாம் அசட்டுத்தனமாக ஒரு காரியத்திலிறங்கி விட்டுப் பிறகு ஆலோசனை கேட்கின்றீர்கள். இராமனையும், இலக்ஷ்மணனையும் போர் புரிந்து தாம் முதலில் கொன்றிருக்க வேண்டும். அப்பொழுது சீதை தானாக உங்களைப் பின் தொடர்ந்து ஓடி வந்திருப்பாள். இராமபாணம் வாராது இருக்கும் வரையில் தாம் உயிர் வாழ்ந்து இருப்பீர். போனது போகட்டும். தாம் எனது தமையன். தவறுகள் பல தாம் செய்திருக்கிறீர்கள் எனினும் தம்பியாகிய நான் எப்பொழுதும் தங்களுக்குப் பக்கபலமாக இருப்பேன். இராமனையும், இலக்ஷ்மணனையும் கொன்று தள்ள நான் தீர்மானித்திருக்கிறேன். என்னுடைய எண்ணம் நிறைவேறும்பொழுது தாம் சீதையை வைத்து வேண்டியவாறு சுகித்திருக்கலாம்.''

(மஹாபார்ஸ்வன் என்னும் நாமம் படைத்திருந்த தலை சிறந்த சேனாதிபதி தன் கருத்தைத் தெரிவித்தான்.)

மஹாபார்ஸ்வன் : "கொடிய மிருகங்கள் வாழும் கானகத்தில் கலைத்து எடுத்த தேனை அருந்தாதவன் மடையன். ராஜாதி ராஜனே! நீங்கள் சீதையைப் பிரித்து எடுத்துக் கொண்டு வந்து விட்டீர்கள். விரும்பியவாறு அவளை வைத்து அனுபவியுங்கள். நுழைய முடியாத இலங்

கைக்குள் எதிரிகள் எப்படியாவது நுழைய நேர்ந்தால் அவர்களையெல்லாம் துடைத்தொழிப்பது என் கடமை.''

இராவணன் : "விஷயம் ஒன்றை இச்சபை நடுவே நான் நவில் விரும்புகிறேன். பெண்ணொருத்தியை நான் சிறை எடுக்க முடியும். ஆனல் அவளுடைய சம்மதமில்லாது சம்போகத்தின் நோக்கத்தோடு அவள் மீது நான் கை வைத்தால் என் தலை சுக்கல் சுக்கலாகத் தெறித்துப் போகும். இந்த சாபத்தை சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவன் என்மீது சுமத்தியிருக்கிருர். ஆதலால் சீதையின் போக்குக்கு எதிராக நான் போக முடியாது.''

பிரகஸ்தன் : "வேந்தர்களுக்கெல்லாம் தலைசிறந்த வேந்தே! தங்களுடைய வல்லமையை உள்ளபடி யார்தான் அறிந்துகொள்ள முடியும்? தேவர்கள் ஆனுலும் சரி, தைத்யர்கள் ஆனுலும் சரி, தானவர்கள் ஆனுலும் சரி, அவுணர்கள் ஆனுலும் சரி, இலங்காபுரி அரசனென்ருல் நடுநடுங்குவார்கள். இந்த அற்பக் குரங்கு கூட்டமும் கால் நோக நடந்து வந்துகொண்டிருக்கும். இந்த நரர்கள் இருவரும் தங்கள் முன்னிலையில் எம்மாத்திரம்? ஊழித்தீபோன்று அக்கூட்டத்தார் அனைவரையும் நீங்கள் துடைத்துத்தள்ளப் போகிறீர்கள்.''

(கரகோஷம்)

விபீஷணன் : "போற்றுதற்குரிய பெரியோய்! நான் இச்சகம் பேசி உங்களை ஏமாற்ற மாட்டேன். இலங்காபுரிக்கு நாசமும், தங்களுக்கு அழிவும் அணுகி வந்துகொண்டிருக்கின்றன. இராமன் வெறும் மானுடன் அல்லன். அவன் தெய்விக சம்பத்து வாய்க்கப்பெற்றவன். அவனை வெல்ல யாருக்கும் இயலாது."

இந்திரஜித் : "என் சிற்றப்பாவின் கோழைத் தனத்தைக் குறித்து நான் வெட்கப்படுகிறேன். அரக்கர்களுக்கு இருக்கவேண்டிய ஆண்மையும், துணிச்சலும் இவரிடத்து இல்லை; அல்லது ஒரு வேளை இவர் நமக்குப் பகைவருகை மாறிவிட்டார் போலும். இவருடைய பயங்கொள்ளிப் பேச்சுக்கு நாம் உட்படலாகாது. தேவாதி தேவர்கள் பலரைத் தோற்கடித்துள்ள நாமா இந்த நரவடிவினனைக் கண்டு நடுங்கப் போகிறோம்! இவர்களிருவரும் அற்ப மானுடப் பிராணிகள். என்னுடைய சிற்றப்பா பொருத்தமற்ற விஷயங்களைப்பற்றிப் பேசி இலங்காபுரி வாசிகளை அவமானப்படுத்துகிறார்."

விபீஷணன் : "அடே மைந்தா, அவசரப்படாதே. உனக்கு அனுபவம் போதாது. தர்மத்தோடு ஒட்டாத திட்பம் ஒருவனை அழிவில்கொண்டு சேர்க்கும். எனக்குத் தமையனும் உனக்குத் தந்தையுமாகிய இலங்கேசனுடைய அறநெறி பிறண்ட போக்குக்கு நீயும் இந்த மந்திரிமார்

களும் உடந்தையர் ஆகின்றீர்கள். நாசத்தை நோக்கி நீங்கள் எல்லோரும் முந்துகிறீர்கள். என் உற்ருர் உறவினராகிய உங்கள் அனைவரிடத்தும் நான் அன்பு பூண்டிருப்பதால் உங்களுடைய கொடிய போக்கை நான் அறவே எதிர்க்கிறேன்.''

(இப்பொழுது இராவணன் கர்ஜிக்கின்ருன்)

இராவணன்: "ஜென்ம சத்துருவோடு ஒருவன் வாழ்ந்திருக்கலாம், நச்சுப் பாம்புகளோடு பழகலாம்; ஆனல் கபடமும், நயவஞ்சகமும் கூடிய சகோதரர்களோடோ, தாயாதிகளோடோ ஒரு பொழுதும் வாழ்ந்திருக்கலாகாது. வனத்தில் வாழும் யானைகள் வேட்டைக்காரனுக்கு அஞ்சுவதில்லை. ஆனல் தன் இனத்தைச் சேர்ந்த யானைகளை வேட்டைக்காரர்களிடம் பிடித்துக் கொடுக்கும் பாதகம் நிறைந்த யானையைக் கண்டு அஞ்சுகின்றன. வேட்டைக்காரர்களால் வளர்க்கப்பட்டதன் விளைவு அது. பூவிலுள்ள தேன் முழுதையும் உறிஞ்சி எடுத்தான பிறகு தேன் ஈ அந்தப் பூவைப் புறக்கணிக்கின்றது. அதேவிதத்தில் பொருமை பிடித்துள்ள சகோதரன் ஒருவன் பாக்கியசாலியாயிருக்கின்ற சகோதரனை ஒரு நெருக்கடியான வேளையில் கை நழுவவிட்டுவிடுகிருன். விபீஷணு! இந்த நொடிப்பொழுதில் உன்னை நான் வெட்டித் தள்ள முடியும். ஆனல் நீ என் உடன்பிறந்த

வன் என்னும் வாஞ்சையால் நீ உயிர் தப்பிக்க விட்டுவிடுகிறேன். என் காட்சியினின்று எங்கேயோ ஒழிந்து தொலை.''

விபீஷணன் : ''யாண்டும் என் அன்புக்குரிய அண்ணு! நீங்கள் கருதுகிற பிரகாரம் நான் உங்களுக்கு நயவஞ்சகன் அல்லேன். கொடிய துன்மார்க்கத்தினுல் தூண்டப்பெற்று தாங்கள் அழிவை நோக்கி அதிவேகம் போய்க்கொண்டிருக்கிறீர்கள். இனி,உங்களைக் காப்பாற்ற எனக்கு இயலாது. உங்களுடைய காமநோய் வரம்புகடந்து போயிற்று. உங்களை முன்னிட்டு உங்களைச் சார்ந்துள்ள மந்திரிப் பிரதானிகள், சேனைகள் அத்தனைபேரும் அழியப் போகிருர்கள். இனி நான் உங்களை உயிரோடு காணமாட்டேன். எனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்திருப்பதாகச் சொல்லுகிறீர்கள். என்னைக் கொல்ல உங்களுக்கு இயலாது. என்னுல் இயன்றவளவு இலங்காபுரியையாவது காப்பாற்ற முயலுகிறேன்.

(தோழர்கள் நால்வருடன் விபீஷணன் பின் வாங்குகிருன்.)

காட்சி 5.

பரத கண்டத்தின் தென்கடற்கரையில் இராமனுடைய பாசறை.

சுக்ரீவன்; "இராமா, இலங்காபுரியிலிருந்து இராவணனுடைய தம்பியாகிய விபீஷணன் இங்கு வந்துள்ளான். அவனோடுமற்றும் நான்குஅரக்கர்கள் வந்திருக்கிறார்கள். மிகப் பகட்டாக உடையணிந்திருக்கிறார்கள். சீதாதேவியை சிறையில் வைத்ததன் விளைவாக, தமையனுக்கும் தம்பிக்கும் அபிப்பிராய வித்தியாசம் வந்து விட்டதாம். தமையனோடு பிணங்கிக்கொண்டு தம்பி இங்கே வந்துள்ளான். தங்களிடம் அடைக்கலம் புகுதல் அவனுடைய நோக்கமாகும்."

இராமன்: "சுக்ரீவா, அந்த அரக்கனை நீ இப்பொழுது தான் சந்தித்து உரையாடியிருக்கிறாய். அவனைப்பற்றி நீ பூண்டுள்ள அபிப்பிராயம் யாது?"

சுக்ரீவன்: "அந்த விபீஷணன் இங்கே வந்திருப்பதன் நோக்கம் நேர்மையானது என எனக்குத் தோன்றவில்லை. கபடமே வடிவெடுத்துள்ள அரக்கர்கள் எத்தகைய கொடூரச் செயலிலும் ஈடுபட வல்லவர்கள். வந்திருக்கிற ஐவரையும் ஒழித்துத் தள்ளுவதுதான் முறை என்று எனக்குத் தோன்றுகிறது."

இராமன்: "அவ்வளவு அவசரம் வேண்டாம். 'நுண்ணிய கர்மம் எண்ணித்துணிக' என்பது கோட்

பாடு. இந்த நெருக்கடியைச் சற்று நிதானமாக நாம் எல்லோரும் கூடி ஆராய்ந்து பார்ப்போம். அங்கதா, உன்னுடைய கருத்து யாது?''

அங்கதன் : "இராக்ஷசர்கள் முரடர்கள். எண்ணிப் பார்க்காது மும்முரமாகச் செயலில் ஈடுபடுகிறவர்கள். தங்களுடைய முரட்டுப் போக்கிலேயே சில வேளைகளில் நன்மைகளையும் செய்கிறார்கள். வந்திருக்கிறவன் இராவணனுடைய தம்பி. நாம் ராக்ஷசர்களை எதிர்த்துப் போராடப் போகிறோம். வைரத்தைக்கொண்டு வைரத்தைவெட்டுவதற்கு நிகராக இராக்ஷசர்களை ஒழிப்பதற்கு இந்த இராக்ஷசக் கருவிகளைப் பயன்படுத்துவது உசிதம் என எனக்குத் தோன்றுகிறது."

இராமன் : "சரபா, உன்னுடைய கருத்து யாது?''

சரபன் : "வேவு அறிவதில் நிபுணர்களைக்கொண்டு இவர்கள் இங்கு வந்திருப்பதன் நோக்கம் யாது என்பதைக் கண்டுபிடிப்போம். அதைக் கண்டு பிடித்தான பிறகு உசிதமானதைச் செய் வோம்.''

இராமன் : "ஜாம்பவான், நீ சாஸ்திரங்களை மிகக் கற்றறிந்தவன். உன்னுடைய கருத்து இந்த நெருக்கடியில் மிக நன்கு பயன்படும்.''

ஜாம்பவான் : "இங்கு வந்திருக்கும் விபீஷணன் நம்முடைய சத்துருவாகிய இராவணனுடைய தம்பி. பொருந்தாத வேளையில் பொருந்தாத இடத்

துக்கு நட்பை நாடி வந்திருக்கிருன். இவனுடைய வரவு சந்தேகத்திற்குரியது."

இராமன் : "மைந்தா! நீ ராஜநீதி மிக அறிந்தவன். உன்னுடைய அபிப்ராயத்தைத் தெரிவிப்பாயாக."

அங்கதன் : "இராவணனை விட்டுப் பிரிந்தபொழுது விபீஷணன் கடைசியாகக் கூறிய வார்த்தைகளை மிகச் சாமர்த்தியமாகவும், மரியாதையாகவும் அவனிடத்திருந்து நாம் வாங்க வேண்டும். இந்தக் கடைசி வார்த்தையினின்று இவன் இங்கு வந்த நோக்கத்தை நாம் கண்டுபிடித்து விடலாம். அடுத்தபடி அதற்கேற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்வோம்."

இராமன் : "ஆஞ்சனேயா, உன்னுடைய அபிப்ராயம் யாதோ?"

ஆஞ்சனேயன் : "என்னுடைய பேச்சுத் திறமையை வெளிப்படுத்துவதற்காகவோ, அல்லது என்னுடைய பாண்டித்தியத்தை விளம்பரப்படுத்துவதற்காகவோ நான் பேசவில்லை. பொருத்தமானது எதோ அதை நான் தம் முன்னிலையில் வைக்கிறேன். போர் துவக்குவதற்கு முன்பு எதிரிக்குச் சரியான பின் பலமாயிருந்தவன் எதிரியினிடமிருந்து பிரிந்துகொண்டு நம்மோடு சேர்வாணுகில் அதற்கேற்றவாறு எதிரியின் பலம் குறைகிறது. ஆக,சரண்புக வர விரும்புகின்ற ஒருவனைக் கொல்லுதல் என்னும் கேள்

விக்கு இடமில்லை. பொல்லாதவர்களையும் நாம் பயன்படுத்தக் கற்றுக்கொள்ளுவோமானால் அந்தப் பொல்லாதவர்களைக் கொண்டே நல்ல காரியங்கள் பலவற்றைச்செய்து சாதிக்கலாம். இப்பொழுதுள்ள நெருக்கடியில் அடைக்கலம் புக வந்திருப்பவர்களுடைய மனப்பான்மையை அறிந்துகொள்ளுதற்கு ஒற்றர்களை நியமிக்க நமக்கு நேரமில்லை. தக்கதருணத்தில் தக்க இடத்துக்கு விபீஷணன் வந்திருக்கிறான். எதிரியின் பக்கமுள்ள தீமைகளனைத்தும் நாள் ஏற ஏற நமக்கு நன்கு புலப்படுகின்றன. அத் தீமைகளைச் சகிக்கவோ, அனுமதிக்கவோ இயலாதவனாக விபீஷணன் பொருத்தமான இடத்துக்கு வந்திருக்கிறான். தமையனை விட்டுப் பிரிகின்றபொழுது விபீஷணன் பேசிய பேச்சு யாது என்பது முக்கியமானது அல்ல; எந்த நோக்கத்தோடு அவன் நம்மிடம் வந்திருக்கிறான் என்பதே முக்கியமானது. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது கோட்பாடு. விபீஷணனுடைய முகவிலாசத்தினின்று அவன் தூய மனம் படைத்தவன் என்பது தெற்றெனை விளங்குகிறது. பிரபோ, புதிதாக வந்திருக்கிறவனைப் பற்றிய என் அபிப்ராயம் இது. தமக்கு எது உசிதம் எனத் தோன்றுகிறதோ அதைத் தாம் செய்தருள்வீர்களாக.''

இராமன் : ''ஆஞ்சநேயா! உன்னுடைய அபிப்ராயங்களை நான் முற்றிலும் ஆமோதிக்கிறேன்.

உனக்கும் எனக்குமிடையில் விபீஷணனைக் குறித்துக் கருத்து வேற்றுமை இல்லை.

(சுக்ரீவனைப் பார்த்து)

சுக்ரீவா! அடைக்கலம் நாடி வந்திருக்கிறவர்களை அதிவிரைவில் என்னிடம் அழைத்து வா."

சுக்ரீவன் : "இராமா, மீண்டும் ஒரு முறை நான் உன்னிடம் விண்ணப்பிக்கிறேன். ராக்ஷசர்களை நாம் ஒரு பொழுதும் நம்பலாகாது. இந்த விபீஷணன் தன் தமையனால் தூண்டப் பெற்று ஏதோ ஒரு கொடிய செயலைச் செய்யத் துணிந்து இங்கு வந்திருக்கின்றான்; அல்லது இவனுக்கும் இவன் தமையனுக்குமிடையில் இந்த நெருக்கடியில் பிணக்கு ஏற்பட்டு இருக்கு மாகில் இவன் தன் தமையனுக்கு நம்பிக்கை துரோகம் பண்ணியிருக்கிறான். எந்த விதத்திலும் இவன்செயல் ஆமோதிப்புக்குரியதன்று. ஆதலால் பாசாங்குக்காரர்களைக் கொன்று தள்ளுவதே முறை."

இராமன் : "என்னை நாடி வருகிறவன் நல்லவனாக இருக்கலாம், அல்லதுகெட்டவனாக இருக்கலாம். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. யார் ஒருவன் என்னிடம் சரணுகதி புகுகின்றானே அவனைக் காப்பது என் கடமை. என்னுடைய ஜீவிதத்தில் நான் கொண்டுள்ள தீர்மானங்களுள் இதுஒன்று. இப்பொழுது இராவணனே இங்கு வந்து என்னிடம் அடைக்கலம் புகுவா

னுகில் நான் அவனை ஒருபொழுதும் ஒதுக்கி வைக்கமாட்டேன். மற்றொரு விஷயம். இவ்வுலகிலுள்ள எவ்வுயிரும் எனக்குத் தீங்கு செய்ய மாட்டாது. உடனடியாகச் சென்று விபீஷணனை இங்கு அழைத்து வருவாயாக."

சுக்ரீவன் : "போற்றுதலுக்குரிய பெரியோய்! உன்னுடைய பெருமைகளை நான் இப்பொழுது ஓரளவு அறியவருகிறேன். இதோ விபீஷணனை இப்பொழுதே உன்னுடைய சந்நிதானத்தில் கொண்டு வந்து நிறுத்துகிறேன்."

(விபீஷணனை அழைத்து வருகிறார்கள்)

விபீஷணன்: "ஐயனே! நான் இராவணனுடைய கடைசி தம்பி. உன்னிடம் அடைக்கலம் புகுகிறேன். இலங்காபுரியில் எனக்குச் சொந்தமாயிருந்தவைகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு உன்னிடம் வந்துள்ளேன்."

இராமன் : "உன்னை நான் எனக்குச் சொந்தமானவனாக ஏற்றுக்கொள்ளுகிறேன். இது உறுதி. உன் தமையனைப் புறக்கணித்துவிட்டு நீ என்னிடம் வந்ததற்குக் காரணம் யாதோ?"

விபீஷணன் : "சீதாபிராட்டியாரைச் சிறையெடுத்து வந்து இலங்காபுரியில் அடைத்து வைத்தது சரியல்ல என்று என் தமையனிடம் நான் எவ்வளவோ நயந்து சொன்னேன். அவன் போக்குக்கும் என் போக்குக்கும் ஒற்றுமையில்லை."

இராமன்: "இராவணனையும், அவனுடைய படைகளையும், சேனுதிபதிகளையும் துடைத்துத்தள்ளி விட்டு ஜானகிதேவியை மீட்டெடுக்க நான் தீர்மானித்துள்ளேன்."

விபீஷணன்: "இலங்காபுரி எவ்விதத்திலாவது காப்பாற்றப்படவேண்டும் என்பது என்கோரிக்கை. அதன் பொருட்டுப் பொல்லாதவர்களை அழித்துத்தள்ள என்னுல் இயன்றஅளவு இராமா! நான் உனக்குப் பணிவிடை பண்ணுவேன்."

இராமன்: "இலங்காபுரியின்மீது நாங்கள் முற்றுகை இடுகிறேும். எங்கெந்த எதிரியினிடத்து எத்தகைய திறமையிருக்கிறது, ரகசியமான வல்லமையிருக்கிறது ஆகியவைகளை முற்கூட்டியே நாங்கள் அறிந்து கொண்டால் யுத்தத்தை வெற்றிகரமாக முடிப்பது எளிதாகும். விபீஷணு, உனக்குத் தெரிந்திருக்கிறவைகளை உள்ளபடி எங்களுக்கு எடுத்து விளக்குவாயா?"

விபீஷணன்: "நோயாளி ஒருவனை உற்ருர் உறவினர் சிகிச்சைக்காக மருத்துவரிடம் கொண்டு வருகிருர்கள். மருத்துவருக்குத் தெரியாத நோயாளியைப் பற்றிய சில நுட்பங்களை உறவினர் அறிந்திருக்கின்றனர். அந்த முறையில் இலங்காபுரியின் நுட்பங்களனைத்தும் எனக்கு நன்கு தெரியும். அவைகளைப் பெருக்கிக் கொண்டு போக அவகாசமில்லை. முக்கியமான சிலவற்றை மட்டும் ரகுவீரா! உனக்கு நான்

எடுத்து விளக்குகிறேன். அவைகளை நீ பயன் படுத்திக் கொள்ளுவாயாக."

இராமன் : "மிக நன்று. இலங்காபுரிப் போர் வீரர்கள் சிலருடைய திறமையையும், உயிர் நுட்பங்களையும் எனக்கு எடுத்து விளக்குவாயாக."

விபீஷணன் : "இராமா! மூன்று முக்கியமான வீரர்களின் வல்லமைகளை உனக்கு எடுத்து விளக்குகிறேன். இந்த மூவரை நீ சமாளித்துக்கொள்வாயாகில் வெற்றி உன்னுடையதே."

இராமன் : "அவர்கள் யார்? ஒருவன் பின் ஒருவனாக அவர்களின் வாழ்க்கை நுட்பங்களையும், ஆயுதத் திறமையையும் எனக்கு எடுத்துச் சொல் பார்ப்போம்."

விபீஷணன் : "முதலில் கும்பகர்ணனைப் பற்றிச் சொல்லுகிறேன். அவன் எனக்கு மூத்தவன். இராவணனுக்குப் பின் பிறந்தவன். ஆக,நாங்கள் மூவர் சகோதரர்கள். இந்தக் கும்பகர்ணன் போர்க்களத்திற்குள் வந்தால் புற்றிலிருக்கும் கரையான்களையெல்லாம் கரடி எடுத்து விழுங்குவது போன்று எதிரியின் சேனையிலுள்ள காலாட்களை எல்லாம் எடுத்துப் புசித்து ஏப்பம் விட்டு விடுவான். எதிரிகளிடமிருந்து அவன் எவ்வளவுக்கெவ்வளவு அடிபடுகின்றானோ, தாக்குதலடைகின்றானோ, அவ்வளவுக்கவ்வளவு அவனுக்குப் புதிய ஆற்றல்கள் வளர்ந்து

கொண்டே போகும். அவனைப் பற்றிய மற்ருெரு முக்கியமான விஷயம். அவன் மேனியிலுள்ள அவயவம் ஏதேனும் ஒன்று சிதைக்கப்படுமாஞல் அதற்கு ஈடாக ஏனைய அவயவங்களுக்குப் பன்மடங்கு வலிவு அதிகரிக்கிறது. இது அவனைப்பற்றிய மர்மம்."

இராமன் : "மிக நன்று. இச்செய்தி போர் நடக்கிற பொழுது நமக்கு நன்கு பயன்படும். இத்தகைய வல்லமை வாய்க்கப் பெற்றவனை எப்படிச் சமாளிப்பது என்பதை நான் பார்த்துக்கொள்ளுகிறேன். இனி, அடுத்தவனைப் பற்றி உனக்குத் தெரிந்திருப்பவைகளைத் தெளிவுற எடுத்து எங்களுக்குத் தெரிவிப்பாயாக."

விபீஷணன் : "இலங்கை வேந்தனுகிய என் தமையனுடைய மூத்த குமாரன் இந்த்ரஜித். தேவேந்திரனை அவன் எளிதில் வென்றிருப்பதால் அவனுக்கு இந்தப் பெயர் வந்துள்ளது. அவனிடத்திலுள்ள போர்த்திறமை அலாதியானது.அதை எப்படிச் சமாளிப்பது என்பதுதான் பெரிய பிரச்னையாகும். போர்க்களத்துக்கு வருவதற்கு முன்பு அவன் ஏதோ ஒருவித வேள்வி வேட்கின்றுன். அதன் விளைவாக அவன் இருக்குமிடம் எதிரியின் கண்ணுக்குத் தென்படாது. அவன் பொழிகிற பாணங்களுக்கு அடிபணிவதைத் தவிர சத்துரு வேறு ஒன்றும் செய்ய முடியாது."

இராமன் : "இது ஓர் அற்புதமான போர்த்திற மையே. இந்தப் பாங்கில் தன்னைப் போருக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டவனைப் பற்றி நான் இதுவரையில் கேள்விப்பட்டதே இல்லை. ஆயினும் இந்த நெருக்கடியையும் சமாளிக்க நமக்கு இயலும். அவனிடத்தில் இன்னும் என்ன திறமையிருக்கிறது?"

விபீஷணன் : "அந்தத் திறமை தான் சமாளிப்பதற்கு அரிதாகிறது. தேவர்களெல்லாம் அவனிடம் தோல்வியுறுவதற்கு இதுவே காரணமாகிறது. யார் ஒருவன் பன்னிரண்டு வருஷங்கள் உண்ணாது, உறங்காது இருக்கின்றானோ அவன் தான் இந்த்ரஜித்தைத் தோற்கடிக்க முடியும். இந்த நெருக்கடியை இராமா நீ எப்படித்தான் சமாளிக்கப் போகின்றாயோ அது எனக்குத் தெரியவில்லை."

இராமன் : "வாஸ்தவம் தான். இதற்கேற்ற முறையை எந்த விதத்தில் நிர்மாணிப்பது என்பது எனக்கு விளங்கவில்லை."

(இராமன் சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறான்.)

இலக்ஷ்மணன் : "அண்ணா! உண்மையிலேயே இது ஒரு தர்ம சங்கடமான நிலைதான். அரக்கன் ஒருவனுடைய சூழ்ச்சி எவ்வளவு நுட்பமானது என்பது இதினின்று வெளியாகிறது. ஆயினும் தெய்வாதீனமாக இதைச் சமாளிப்பதற்கேற்ற வல்லமை எனக்கு வந்து வாய்த்திருக்கிறது.

அதை நான் நன்கு பயன்படுத்திக் கொள்கிறேன். ஆதலால் அண்ணா இதைப் பற்றிய கவலை தங்களுக்குச் சிறிதும் வேண்டாம்."

இராமன் : "தம்பீ! நீ பகருவது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. இந்த நெருக்கடியை நாம் எப்படித்தான் சமாளிக்கப் போகிறோம்.

இலக்ஷ்மணன் : "அண்ணா! அயோத்தியை விட்டு நாம் புறப்பட்ட பொழுது என் அன்னை சுமித்ரா தேவி எனக்கு ஆணை ஒன்று இட்டாள். "மகனே வனவாசம் முடியும் வரையில் இராமன் உனக்குத் தந்தை; சீதாதேவி உன் தாய். அவர்கள் இருவருக்கும் அல்லும் பகலும் நீ பணிவிடை பண்ணி அவர்களுக்குக் காவல் இருப்பாயாக." அந்த ஆணைப்படியே நான் செய்து வருகிறேன். அதற்காக உறக்கத்தைத் துறந்தது எனக்கு ஒரு கஷ்டமாகத் தென்படவில்லை. மனிதன் நெடுங்காலம் உறங்காது இருக்க முடியும் என்பது என் அனுபவம். மற்றொரு நிகழ்ச்சி தற்செயலாய் நேருவதாயிற்று. வனத்தினுள் சென்று காய், கனி, கிழங்கு ஆகியவைகளை சேகரித்துக் கொண்டுவந்து எனக்கு அன்னையும், அப்பனுமாக இருக்கும் உங்களிருவருக்கும் சமர்ப்பிப்பேன். ஒரு வேளை வனத்திலேயே நான் பசியை ஆற்றியிருப்பேன் எனக் கருதி நீங்களிருவரும் போஜனம் பண்ணி வந்தீர்கள். அதைப் பார்த்து நான் பரமானந்தமடைந்தேன்.

ஆதலால் பசி என்னும் பிணி என்னை விட்டுப் பறந்தோடி விட்டது. ஒரு காரியத்திற்காக நான் பன்னிரண்டு வருஷம் உண்ணாது உறங்காது இருந்தது மற்றொரு பெரிய காரியத்திற்குப் பயன்படப் போகிறது. இந்த இந்த்ரஜித் பெற்றிருக்கின்ற வரத்தை நான் முறியடித்து விடுவேன். ஆதலால் தாங்கள் அதைக் குறித்து தயங்கவேண்டாம்."

இராமன் : "தம்பீ! எங்கள் பொருட்டு நீ இத்தகைய அரிய பெரிய தியாகத்தைப் பண்ணியிருக்கின்றாயா? இப்பொழுது அதைக் குறித்து நீ வாய்விட்டுச் சொல்லாதிருந்தால் உன்னிடத்திருந்த மகிமையை நான் அறியாது போயிருப்பேன். உன் கைங்கரியத்துக்கு நான் என்ன கைம்மாறு செய்யமுடியும்?

(விபீஷணனைப் பார்த்து)

எல்லாம்வல்ல இந்த்ரஜித்தை வெல்லுதற்கான உபாயம் திருவருள் சம்மதமாக நம்மிடம் இப்பொழுது அமைந்திருக்கிறது. உனது தமையனாகிய இராவணனைப் பற்றிய ரகசியம் யாதோ?"

விபீஷணன் : "இலங்கேசனாகிய இராவணன் என்றால் தேவாதி தேவர்கள் எல்லாம் நடுங்குகின்றனர். இதுவரையில் மூவுலகில் எந்த மூர்த்தியும் இராவணனைத் தோற்கடித்தது கிடையாது. அத்தகைய பராக்கிரமம் வாய்ந்த பார் ஆளும் வேந்தனை யுத்தத் தளவாடம் ஏதுமில்

லாது வெறும் ஆளாக வந்திருக்கின்ற இராமா! நீ எப்படி வெல்லப்போகிருயோ! அதுதான் எனக்கு விளங்கவில்லை. ஆனல் அவனை நீ வென்ருலொழிய இலங்காபுரிக்கு சௌபாக்யம் ஏதும் வாய்க்காது."

இராமன்: "பெரிய பாறை ஒன்றை சிறிய உளி ஒன்று பிளந்து தள்ளுவது போன்று நான் ஏன் அவனை மாய்க்க முடியாது போய்விடும்? என் பாணம் இதுவரையில் பொய்யாகப் போனது கிடையாது."

விபீஷணன்: "இராமா! நீ சொல்லுவது முற்றிலும் மெய். ஆனல் என் தமையன் அரிய பெரிய வரம் ஒன்று வாங்கியிருக்கிருன். அந்த வரத்தின்படி அண்டமெங்குமுள்ள உடல் எடுத்துள்ள மூர்த்திகள் யாருமே எனக்கு முன் பிறந்தவனை மாய்த்துவிட முடியாது. அந்த மூர்த்திகளைப் பற்றிய பெரிய ஜாபிதா ஒன்றை பிரம்ம தேவன் முன்னிலையில் சமர்ப்பித்து அவர்கள் யாரிடமிருந்தும் தனக்கு மரணம் வாராது என்னும் வரத்தை அவன் வாங்கி இருக்கிருன்; அதன்படி யாருமே அவனை அசைக்க முடியாது."

இராமன்: "விபீஷணு! 'வல்லவனுக்கும் உண்டு வழுக்குப்பாறை' என்னும் கோட்பாட்டின்படி உன் தமையன் இராவணன் பிரம்மதேவனிடம்

படைத்த பட்டியலில் நரனையும், வானரனையும் சேர்க்கவில்லை என்பது உனக்குத் தெரியுமா?''

விபீஷணன்: ''ஆம் வேந்தே! அதைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். வேண்டுமென்றே அவன் இந்த இரண்டு அற்ப ஜந்துக்களைத் தன் பட்டியலில் சேர்க்கவில்லை. அவர்களால் தன்னைக் கொல்ல முடியாதாம். அவர்களை இந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளுவது தன்னுடைய அந்தஸ்திற்குக் குறைவாம்.''

இராமன்: ''அந்த மர்மத்தை அறிந்துதான் நானும் சுக்ரீவனும், நரனாகவும், வானரனாகவும் வந்திருக்கிறோம்.''

விபீஷணன்: ''நீங்கள் இப்படி வந்திருப்பது வியப்புக்குரிய விஷயமே. ஆனால் இராவணனைப் பற்றிய மற்றொரு ரகசியத்தை நான் இப்பொழுது உனக்கு எடுத்துரைக்கிறேன். வெட்ட வெட்ட இராவணனுடைய தலை வளர்ந்து கொண்டேயிருக்கும். எங்ஙனம் கடலில் உள்ள அலைகள் அனைத்தையும் ஏக காலத்தில் அடக்க முடியாதோ, அங்ஙனம் வளர்ந்துகொண்டே வருகிற இராவணனுடைய தலைகளனைத்தையும் தகர்த்தொழிக்க யாருக்கும்முடியாதே! இராமா, நீ இந்த நெருக்கடியை யுத்தகளத்தில் எப்படி சமாளிப்பாய்?''

இராமன்: ''வாயுதேவன் ஒருமணி நேரம் வேலை செய்யாது அடங்கியிருந்தால் சமுத்திரம் எங்கு

முள்ள அலைகளனைத்தும் ஏககாலத்தில் அடங்கிப்போகும். அதே பாங்கில் ஏனைய முறையில் இராவணனுடைய தலையைக் கொய்ய என்னால் இயலாது போனால் கடைசி உபாயம் ஒன்று உள்ளது. அகஸ்திய முனிவர் எனக்கு அளித்துள்ள அஸ்திரம் ஒன்று உள்ளது. தலையைக் கொய்வது அதனுடைய செயலன்று. அந்த அஸ்திரத்தினுடைய வல்லமையைப் பற்றிய இரகசியம் அகஸ்திய முனிவருக்கும், எனக்கும் தான் தெரியும். மானுடன் ஒருவனால் தனக்கு மரணம் வாய்க்காது என்று இறுமாப்புற்றிருக்கின்ற இலங்கை வேந்தன் மானுடனாகிய என்னால் அழிந்துபட்டுப் போவதை நீ காண்பாய். அகஸ்திய முனிவர் அதற்கேற்ற உபாயங்களையெல்லாம் எனக்கு உபதேசித்திருக்கின்றார்."

விபீஷணன்: "ப்ரபோ! எனக்கு இனி ஐயம் ஒன்றும் இல்லை. உன்னுடைய நோக்கமும், என்னுடைய நோக்கமும் ஒன்று சேர்ந்தே நிறைவேறும் என்னும் நம்பிக்கை எனக்கு இப்பொழுது உள்ளது."

காட்சி 6.

(இலங்காபுரி முற்றுகைக்கு ஏற்பாடு)

இராமன் : "விபீஷணு! உன்னுடைய நாடாகிய இலங்கைக்குள்ளே நாம் புகுந்தாய்விட்டது. தலைமைப் பட்டணத்தையும் இப்பொழுது நாம் அணுகியுள்ளோம். இதன் கோட்டைக்குள் இருக்கும் சூழ்ச்சிகள் அனைத்தையும் நீ நன்கு அறிந்திருக்கிறாய் என்பது திண்ணம். நம் பக்கமுள்ள படைபலத்தையும் நீ அறிந்திருக்கிறாய். எந்தெந்த வாயிலில் எந்தெந்த சேனாதிபதி என்ன பாங்கில் முற்றுகை போடவேண்டும் என்பதை நீ நிர்ணயிப்பாயாக."

விபீஷணன் : "ஆம் இராமா, உன்னுடைய ஆணைப் படியே நான் நடந்துகொள்ளுகிறேன். சுக்ரீவா! தயைகூர்ந்து சற்று நீ இங்கே வா. உனக்குரிய படைகளைத் திரட்டிக்கொண்டு கீழ் வாயிலில் தாக்குதற்கு ஆயத்தப்படுத்து. அங்கதா! நீ தந்தைக்கேற்ற மைந்தன். உன்னுடைய சேனைகளைத் திரட்டிக்கொண்டு நீ மேல் வாயிலுக்குச் செல். ஆங்கு உன் மீது வந்து தாக்குகிற அரக்கர்களை நீ நன்கு சமாளிப்பாய். மாருதி! நீ மகா வீரன். தென் வாயிலுக்கு நீ போ. தேவை என்று தோன்றினால் படை ஒன்றையும் நீ திரட்டிக்கொண்டு போ. நீ தனியாகவே இருந்துகொண்டு உன்னைத்தாக்கு

கிறவர்களையெல்லாம் நீ தகர்த்தொழிக்க உனக்கு முடியுமென்னும் முழுநம்பிக்கை எனக்கு உண்டு. முதியோனுகிய ஜாம்பவானே! தயை கூர்ந்து வடபுறம் இருக்கும் வாயிலருகே உன்னுடைய படையைத் திரட்டி வைத்துக்கொள். நான்கு வாயில்களிலும் முற்றுகை போடுவதற்கு ஆயத்தமாக இருக்கிற நீங்கள் அவரவர் கடமைகளை நன்கு நிறைவேற்றுவீர்கள். தேவையேற்படுகிற இடங்களில் எல்லாம், இராமனும் இலக்ஷ்மணனும் பிரசன்னமாகி நல்ல பாதுகாப்பளிப்பார்கள். நான் நேராக இந்தப் போரில் கலந்து கொள்ளுவது பொருந்தாது."

காட்சி 7.

(இராமனும், அவனுடைய தளபதிகளும் மலை உச்சியிலிருந்து இராவணனைப் பார்க்கிருர்கள். இராவணன் தன்னுடைய மாளிகையின் மேல் தளத்தில் நின்றுகொண்டு வானர சேனைகள் ஆங்காங்கு இடம் பெற்றிருப்பதைக் கூர்ந்து கவனிக்கின்ருன்.)

விபீஷணன்: "அதோ அங்கு மாளிகையின் மேல் ஆசனத்தில் அமர்ந்துகொண்டு நம் அமைப்பை உளவறிகின்ற பாங்கில் கவனித்துக்கொண்டிருப்பவன்தான் என் தமையன், இலங்காபுரி வேந்தன்."

சுக்ரீவன் : "ஆ! அப்படியா! விட்டேனு அந்தப் பாவியை" (என்று பகர்ந்து அவன் பாய்கிருன். வானவெளியில் பறந்துவந்து சுக்ரீவன் இலங்கேசனுடைய தலையில் ஓங்கி அடிக்கின்ருன் கிரீடம்சிதறி விழுகிறது.)

(சுக்ரீவ, இராவண யுத்தம்)

காட்சி 8.

(இந்த்ரஜித் வானவெளியில் மறைந்து இருந்துகொண்டு அம்பைப் பொழிகிருன். அவனிருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க யாருக்கும் இயலவில்லை.)

இலக்ஷ்மணன் : "அண்ணு! இது விந்தையாயிருக்கிறது. நாம் எய்யும் அம்புகள் வெட்ட வெளியில் வீணுகப் போகின்றன. ஆனுல் நம் மீதோ பலப்பல இடங்களிலிருந்து அம்புகள் வந்து நம்மைத் துளைக்க முயலுகின்றன. நாம் தாக்குப் பிடித்து வருகிறோம். இத்தகைய நெருக்கடியைச் சமாளிப்பது எப்படி?"

இராமன் : "இலக்ஷ்மணு! அதுமட்டுமல்ல. இதை விடப் பெரிய நெருக்கடி ஒன்று நம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. எதிரி நாகாஸ்திரங்களை நம் இருவர் மீதும் மந்திரித்து எய்திருக்கிருன். அது வந்துகொண்டிருக்கிறது. அதன் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்கள் போன்று நாம் மயங்கிக்கிடக்க வேண்டும். அதைத் தவிர அந்த அஸ்திரத்தினின்று நம்மை விடுவித்துக்

கொள்ள வேறு உபாயம் ஒன்றுமில்லை. செத்துப் போனவர்கள் போன்று யோகநித்திரையில் கிடப்போம்.''

(பானம் சீறி வந்து சுழல்கிறது. சகோதரர்கள் இருவரும் அதில் கட்டுண்டவர்கள் ஆக வீழ்கின்றனர். வானர சைன்னியங்கள் சிதறி ஓடுகின்றன)

ஜாம்பவான் : ''ஆஞ்சனேயா! நமக்கு நேர்ந்துள்ள இந்த விபத்தைப் பார். எதிரி இராமனையும், இலக்ஷ்மணனையும் நாகாஸ்திரத்தால் கட்டியிருக்கிறுன். அது இவர்களைக் கொல்ல மாட்டாது. நீ அதிவிரைவில் மேருமலைக்குப் பறந்து ஓடு. அது கயிலாயகிரிக்கு வடபுறத்திலிருக்கிறது. சஞ்ஜீவினி என்னும் மூலிகை அந்த மேருமலையில் இருக்கிறது. அது வந்த உடன்தான் இவர்கள் மயக்கம் தெளிவார்கள்.''

சுக்ரீவன் : ''போர் வீரர்களே! பயப்பட வேண்டாம். இந்த ஆபத்தைச் சமாளிக்க நம்மால் முடியும். இராமனும், இலக்ஷ்மணனும் உயிர் துறந்தவர்கள் அல்லர். மயங்கிக் கிடக்கின்றனர். அங்கதன் இவர்களை இப்பொழுதே கிஷ்கிந்தாபுரிக்கு எடுத்துச் செல்லட்டும். அங்கே முறையாகச் சிகிச்சையும் நடைபெறட்டும். விரைவில் இவர்கள் உயிர்பெற்று எழுந்திருப்பார்கள்.''

விபீஷணன் : ''ஆஹா! எல்லாம் அனர்த்தமாய்ப் போயிற்று. அதர்மமே வடிவெடுத்துள்ள என் அண்ணன் வெற்றியடையப் போகிறுன். நான்

போட்டுள்ள திட்டமெல்லாம் பகல் கனவு போன்று பயன்படாது போயிற்று. சாவுக்கு நான் அஞ்சவில்லை. ஆனால் இலங்காபுரியின் கதிதான் அலங்கோலமாகப் போயிற்று. சிறை கிடக்கும் சீதா பிராட்டியாரும் இனித் தன் உயிரைத் தாக்குப் பிடித்து வைத்திருக்க மாட்டாள். கணவன் மடிந்தான் என்னும் செய்தி அவள் காதுக்கு எட்டியவுடனே அவளும் உயிர் நீத்து விடுவாள்."

சுக்ரீவன் : "விபீஷணா! இந்த நெருக்கடியில் நீ மனம் கலங்கலாகாது. மனக் கலக்கம் பூண்டுள்ள ஒருவன் எதையும் சாதிக்க மாட்டான். வீரத்தில் என் தமையன் வாலிக்குக் கிட்டத் தட்ட நான் சமமாவேன். வாலி என்றால் இலங்கை வேந்தன் நடுநடுங்கியிருந்தான். என்னுடைய தரத்தையும் ஆரம்பத்திலேயே நான் அவனுக்குச் சிறிது காட்டியிருக்கிறேன். எந்த விதத்திலும் நான் இராவணனை ஒழித்துக் கட்டி விடுவேன். உன்னை இலங்காபுரிக்கு அரசனாக்குவது என் கடமை. பிறகு சீதா பிராட்டியாரை மீட்டெடுத்துக் கிஷ்கிந்தைக்குக் கொண்டுபோய் தன் கணவனிடம் ஒப்படைப்பதும் என் கடமை. எவ்விதத்திலாவது இந்தத் திட்டங்களை நான் நிறைவேற்றி விடுவேன். நீ கவலைப்பட வேண்டாம். நீ உறுதி பூண்டிருக்கிற அளவு என்னிடத்து வீரியம் ஓங்கும்."

காட்சி 9.

(இலங்காபுரிக்குள் இராமனும், இலக்ஷ்மணனும் மடிந்து போனதைக் குறித்து இலங்காபுரி வாசிகள் கும்மாளம் போடுகின்றனர்.)

"டம் டம் டம் இலங்காபுரி பொது மக்களுக்கு டம் டம் டம், இதனால் தெரிவிப்பது என்னவென்றால் டம் டம் டம். நம் ராஜாதி ராஜன், யுவராஜன் இந்த்ரஜித் டம் டம் டம். அந்த மண்டு இராமனை டம் டம் டம் கொன்று தள்ளிவிட்டான். டம் டம் டம் ஆடுங்கள், பாடுங்கள். டம் டம் டம் குதியுங்கள், கும்மாளம்போடுங்கள் டம் டம் டம் ஒழிந்தான் இராமன். தகிட தோம் ஒழிந்தான் இராமன். தீம் தகிடதோம்.

(இப்படி ஆடிப்பாடிக் கொண்டிருக்கிறார்கள்.)

"நில், நில், நில் எதிரிகள் பக்கமிருந்து ஏதோ ஜய கோஷம் வருகிறது."

(காது கொடுத்துக் கேட்கிறார்கள்.)

"ஜயராம், ஜயராம், இராமன் மயக்கத்திலிருந்து எழுந்து விட்டான். ஹரேராம், ஹரேராம். இராமன் புது வீரத்தோடு தோன்றுகிறான், ஜயராம், ஜயராம்.

(இலங்காபுரிக்குள்) "அடே மோசம் போனோம். அவசரப்பட்டு விட்டோம். இருக்கட்டும். இதற்கெல்லாம் ஈடு நம்முடைய இராஜாதி ராஜன் இராவணன் செய்துவிடுவான். கவலை வேண்டாம்."

காட்சி 10.

இராம, இராவண, யுத்தம்

இராமன் : "தண்டக வனத்தில் பஞ்சவடி ஆஸ்ரமத்தில் நானும், இலக்ஷ்மணனும் இல்லாத நேரம் பார்த்துப் பொய்வேஷம் பூண்டுவந்து சீதையை ஏமாற்றி அவளை அபகரித்துக்கொண்டு போன பாதகன் நீ. அதற்குத் தண்டனையாக நான் இப்பொழுது உன்னைக் கொல்லத் தீர்மானித்திருக்கிறேன்."

இராவணன் : "தபஸ்வி என்னும் பொய் வேஷம் பூண்டு வந்து என் தங்கை சூர்ப்பணகையின் மூக்கை அறுத்த போக்கிரி நீ. ஆதலால் உன்னைக் கொல்ல நான் தீர்மானித்திருக்கிறேன்."

இராமன் : "காமவெறி பிடித்து வந்து சீதையைக் கொல்ல முயன்ற அந்தக் காரிகைக்கு நான் கொடுத்த தண்டனை சாமானியமானது. பிறர் மனைவியைப் பலாத்காரமாக அபகரித்த வாலியின் கதி என்ன ஆயிற்று என்பது உனக்குத் தெரியுமா?"

இராவணன் : "பயங்கொள்ளியாக மறைந்திருந்து வாலியை அடித்து நீ ஏமாற்றினாய்"

இராமன் : "வாலியை வெல்லுதற்கு மறைந்திருந்து அடிப்பதைத் தவிர வேறு உபாயம் இல்லை. உனக்கோ தொடர்ந்து எச்சரிக்கைகள் பல நான் கொடுத்துள்ளேன். உன்னுடைய படை

கள், சேனுதிபதிகள், உற்ருர் உறவினர், மக்கள் இருவர் ஆகிய எல்லாரையும் இம் மண்ணுலகினின்று துடைத்துத் தள்ளியாயிற்று. உனக்கு உயிர்ப்பற்று இருந்தால் சீதையை என்னிடம் ஒப்படைத்து விட்டு இந்த நாட்டை விட்டு வெளியே எங்கேனும் ஓடிப்போ. இந்த நாட்டை விபீஷணனுக்கு உரியதாக்க நான் ஏற்கனவே தீர்மானம் செய்தாயிற்று."

இராவணன் : "என்னுடைய சுற்றம், படைபலம் முழுவதும் இழந்தும் வல்லமையில் நான் இளைத்துப் போனவன் அல்லேன். உன்னை மாய்த்துத் தள்ளிவிட்டு அந்தச் சீதையை என்னுடையவள் ஆக்குவதற்காகவே நான் வாழ்ந்திருக்கிறேன். வீண்பேச்சு வேண்டாம். இதோ இந்தப் பாணத்தை ஏற்றுக்கொள்."

இராமன் : "உன்னுடைய பாணத்தை முறியடித்தாயிற்று. இனி என்ன சொல்லுகிருய்?"

இராவணன் : "அதைவிட மந்த்ர சக்திவாய்க்கப் பெற்ற இதோ இந்த அம்பு உன்னை ஒழிக்கப் போகிறது."

இராமன் : "அந்த அம்பை நான் முறியடித்து ஆயிற்று. இனி என்ன பண்ணப் போகின்ருய்?"

இராவணன் : "அதிலும் மிக்கதோர் மந்த்ரசக்தி வாய்ந்த அஸ்திரம் இதோ வருகிறது. இதற்கு இரையாகி ஒழிந்துபோ."

இராமன் : "அந்த அஸ்திரத்தையும் செயலற்ற தாக்கிவிட்டேன். இதோ என் பாணத்தின் வல்லமையை நீ அறிந்துகொள்."

(இராவணன் திணறுகிருன், மயங்குகிருன், சோர்வு அடைகிருன். பிறகு மற்ருெரு அம்பு எய்கிருன். இராம பாணம் அதைத் தகர்த்துவிட்டு இராவணே மீண்டும் திணறச் செய்கிறது.)

இராமன் : "எடுத்த எடுப்பில் உன்னை ஒழித்திருப் பேன். ஆனல் உன்னைத் திருத்தியமைக்க முயன்று என் வல்லமையை நிதானமாகக் கையாளுகிறேன். இதோ மற்றும் ஓர் எச் சரிக்கைபாணம்."

(இராவணன் தட்டுத்தடுமாறி கீழே வீழ்ந்து தள்ளாடிக் கொண்டு எழுந்து நிற்கின்ருன்)

இராமன் : "நீ தேவர்களோடு போர்புரிந்து வெற்றி வீரனானவன். இத்தகைய திண்டாட்டத்தை முன்பு எப்பொழுதாவது அனுபவித்திருக் கிருயா ?"

இராவணன் : "அல்ப மானுடா உன்னை ஒழிப்பதற் கான ஒப்பு உயர்வு அற்ற பாணத்தை இதோ எய்கிறேன். நீ உருண்டு போ."

இராமன் : "ஆதித்ய ஹ்ருதய அஸ்திரம் வருகிறது. அதனேடு உன்னுடைய பூலோக வாழ்வு முடிவுறுகிறது.

(இராவணன் கரகரவென்று சுழன்று வீழ்ந்துகர்ஜித்துக் கொண்டு உயிர் துறக்கிருன்.)

காட்சி 11.

விபீஷணனுடைய பட்டாபிஷேகம்

விபீஷணன் : "இராமா நான் இப்பொழுது மனம் கலங்கியவனாய் உன்னிடம் வருகிறேன். என் தமையன் இராவணனுக்கும் மடிந்துபோன என் உற்றார் உறவினருக்கும் ஈமக்கிரியைகள் செய்து கொண்டு இருக்க இருக்க எனக்குத் தாங்க வொணாத் துயரம் வந்து விட்டது. என் குலத்தையே அழித்துவிட்ட பாதகன் நான் என நினைக்கிறேன். இந்த எண்ணம் என் உள்ளத்தை உருக்கி வாட்டிக் கொண்டிருக்கிறது."

இராமன் : "அழிந்து பட்டுப்போன உற்றார் உறவினரைக் குறித்து வருந்துவது முறை. ஆனால் நீ குலநாசம் செய்த பழிக்கு ஆளாக மாட்டாய். குலநாசம் செய்த கீர்த்தியே யாண்டும் உனக்குச் சொந்தமாகும். உன் கூட்டத்தார் அனைவரும் அதர்மத்தின் வடிவினர்கள். அதர்மத்தை அகற்றுவது பாபச் செயலன்று. சான்றோர்கள் போற்றப்படும் புண்ணியச் செயலாகிறது அது."

விபீஷணன் : "புதிய சகோதர வாஞ்சை உருவெடுத்து வந்து என் உள்ளத்தைத் துளைத்துக் கொண்டு இருக்கிறது. இதற்கு நான் என் செய்வேன் ?"

இராமன் : "இராவணனும் நீயும் உடன்பிறந்தவர்களே. அது மறுக்க முடியாத உண்மை.

உடலெடுத்துள்ள உனக்கு உடலோடு கூடியே நோய் ஒன்று உருவெடுத்திருக்கிறது என்று வைத்துக்கொள். உடன் பிறந்ததை முன்னிட்டு அந்தநோய்க்கு நீ ஆதரவு தருவாயா? 'நோய்க்கு இடம் கொடேல்' என்பதுதானே கோட்பாடு. இராவணன் இலங்காபுரியையே பாழாக்க வந்த பாதகன். அவனை வென்றும், கொன்றும் இலங்கா புரியை நீ இப்பொழுது பாதுகாத்திருக்கிறாய். அவனை அழிப்பதன் மூலம் அதர்மத்தை நீ இந்த நாட்டினின்று அகற்றியிருக்கிறாய். அந்த சிறப்பு எப்பொழுதும் உனக்குச் சொந்தம். மற்றொரு விஷயம். மடிந்துபோன ஒருவனுடைய குற்றங் களை நாம் மறந்துவிடவேண்டும். உன் தமையன் இராவணன் ஒரு வீரன். அவனுடைய சாவைக் குறித்து நெடுநேரம் வருந்துவது அவனுக்கு நலம் தராது. ஆதலால் உன் துயரத்தை இப் பொழுதே துடைத்து விடு."

விபீஷணன் : "இராமா உன்னுடைய அறிவுரை இப் பொழுது எனக்கு ஒருவாறு தெளிவை உண்டு பண்ணியிருக்கிறது. ஆயினும் உன்னிடத்து ஒரு விண்ணப்பம். (என் தமையனைக்கொன்று என்னை அரசன் ஆக்குவதாக) உன்னிடம் சரணாகதி அடைந்தபொழுது நீ சொன்னாய். நான் யாண்டும் உனக்குத் தொண்டனாய் இருக் கிறேன். என்னை நீ அரசனாக்கினால் ஆதிக் கத்தை நாடி நான் உன்னிடம் வந்தேன் என் னும் பழிக்கு இலக்காவேன்."

இராமன் : "இந்த மனப்பான்மை பாராட்டத்தக்கதே. ஆயினும் நீ உன் நாட்டின் நலனை முன்னிட்டு வேந்தனாகவேண்டும். எந்த நாடும் அரசனில்லாது ஒருநாளும் இருக்கலாகாது. அரசனில்லாத நாடு அலங்கோலமாய்ப் போய்விடும். நாட்டின் நலனை முன்னிட்டு அந்தப் பதவியை நீ ஏற்றே ஆகவேண்டும்."

காட்சி 12.

இராமன் : "விபீஷணா! நீ இப்பொழுது சீதை சிறை கிடக்கும் இடத்துக்குச் சென்று, சிறையினின்று அவளை விடுவித்து இங்கு அழைத்து வருவாயாக."

விபீஷணன் : "இராமா! ஒருவேளை இது அரக்கர்களுடைய புது சூழ்ச்சியென்று சீதை சந்தேகப்படக் கூடும். ஆதலால் அத்தேவியாருக்கு ஏற்கனவே அறிமுகமாயுள்ள ஆஞ்சனேயனை அனுப்பிவைப்பது பொருந்தும் என எனக்குத் தோன்றுகிறது."

இராமன் : "அது அல்ல விஷயம். அத்தேவியாரை சிறையெடுத்துச் சென்றது இலங்காபுரியை ஆண்டு வந்த கொடூர வேந்தன் ஒருவன். இப்பொழுது அவளைச் சிறையினின்று விடுவித்து எடுப்பது அதே இலங்காபுரியை ஆண்டு வரும்

செங்கோல் வேந்தன் ஒருவனுடைய சிறந்த செயலாயிருக்கவேண்டும்."

விபீஷணன் : "ரகுராமா! உன்னுடைய மேலாம் கோட்பாட்டை நான் முற்றிலும் ஆமோதிக்கிறேன். உன்னுடைய கருத்துப்படியே நான் நடந்துகொள்ளுகிறேன். ஆயினும் வேறு சிக்கல் ஏதும் நிகழாதிருத்தல் பொருட்டுத் தயைகூர்ந்து ஆஞ்சனேயனையும் என்னோடு அனுப்பி வைப்பாயாக."

இராமன் : "விபீஷணா! உன்னுடைய சமயோசித புத்தியைப் பெரிதும் பாராட்டுகிறேன். உன்னுடைய அபிப்ராயப்படியே நீயும் ஆஞ்சனேயனும் சேர்ந்துசென்று சீதையை இங்கு அழைத்து வருவீர்களாக."

(விபீஷணனும், ஆஞ்சனேயனும் போகிறார்கள்.)

காட்சி 13.

இராமனும் இலக்ஷ்மணனும் உரையாடல்

இராமன் : "இலக்ஷ்மணா! சீதையைக் குறித்து நான் இதுகாறும் கொண்டிருந்த கவலை போயிற்று. அதைவிடப் பெரிய கவலை ஒன்று இப்பொழுது என் உள்ளத்தை வந்து வாட்டுகிறது. வனவாசத்தில் பதினான்கு வருஷங்கள் பூர்த்தியானதும் குறிப்பிட்ட நாளன்று அயோத்திக்குத் திரும்பி வந்து சேருவேன் என்று தம்பி பரதனுக்கு நான் வாக்குக்கொடுத்தது உனக்குத் தெரியும். குறிப்பிட்ட நாளன்று நான் அங்கு போகாது கால தாமதம் நேரிட்டால் பரதனை சரீரத்தோடு நான் காணமாட்டேன் என்று அவன் கண்ணீரும் கம்பலையுமாக என்னிடம் இயம்பினான். இன்னும் சிலநாட்கள் தாம் பாக்கி இருக்கின்றன. இப்பொழுது நாம் இருப்பது தென் இலங்கையில். தம்பி பரதன் இருப்பது அயோத்தியில். இந்த நெருக்கடியைச் சமாளிப்பது எங்ஙனம் என்று எனக்குத் தெரியவில்லை."

இலக்ஷ்மணன் : "அண்ணா! அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். தக்க ஏற்பாட்டை இந்நாட்டுக்கு இப்பொழுது வேந்தனாயிருக்கும். விபீஷணன் செய்துவைப்பான். ஒருவேளை அது அவனுக்குச் சாத்தியப்படாவிட்டால் நம் அன்பன் ஆஞ்சனேயன் இருக்கின்றான். அவன், நாம் மயங்

கிக்கிடந்தபொழுது நொடிப்பொழுதில் கயிலை யங்கிரிக்குச் சென்று வேண்டிய மூலிகைகளைக் கொண்டு வந்து சேர்த்தான். அந்த மூலிகை களைப் பாகுபடுத்த அவனுக்கு அவகாசமின்மை யால் அந்த மலையையே பெயர்த்தெடுத்து வந் தான். பிறகு அதைப் பழைய இடத்தில் திருப் பிக்கொண்டுபோய் வைத்தான். அத்தகைய ஆஞ்சனேயனுடைய சகாயம் நமக்கு இருக்கும் பொழுது பிரயாணத்தைப்பற்றிய கவலை நமக்கு வேண்டாம். நம்மூவரையும் அவன் நொடிப் பொழுதில் அயோத்தியில்கொண்டு சேர்த்து விடுவான்."

இராமன் : "ஆம் தம்பி. நீ பகருவது முற்றிலும்மெய். இந்த எண்ணம் இது காறும் என் மனதில் பட வில்லை. இது விஷயத்தில் நான் இப்பொழுது கவலை அற்றிருக்கிறேன்."

—

காட்சி 14.

(இராமன் சந்நிதிக்குச் சீதை வருகை)

(இப்பொழுது இராமனுடைய சொரூபம் அறவே மாறுகிறது.)

(புலம்பிக்கொண்டு வந்த சீதையினிடம் சீற்றத்துடன் இராமன் சொல்லுகிறன்.)

இராமன் : "காமநோய் பிடித்திருந்த இராவணனை ஒழித்துத் தள்ளுவதற்கு ஈங்குக் குழுமியிருக்கும் சுக்ரீவன், விபீஷணன் ஆகிய இவர்களுடைய நட்பை நான் நாடினேன். மரணதண்டனை ஒன்றே இராவணனுக்குப் பொருத்தமானது. அத்தண்டனையை அவனுக்குக்கொடுத்தாயிற்று. அதன்மூலம் தர்மம் காப்பாற்றப்பட்டிருக்கிறது. அதே தர்மத்தைக் காப்பாற்றுதல் பொருட்டு ஹே! சீதே, நான் இப்பொழுது உன்மீது நடவடிக்கை எடுக்கிறேன். பாபத்தின் வடிவினனுகிய இராவணன்பலாத்காரமாக உன்னைத் தூக்கிச் சென்றுன். பலமாதங்களாக அவன் உன்னைத்தன் வீட்டில் வைத்திருந்தான். காமக் கண் கொண்டு அவன் பலதடவை உன்னைக் காணலுற்றுன். அதன் விளைவாக நீ இப்பொழுது உன் பவித்திரத்தை இழந்துள்ளாய். கற்பிழந்தசீதையோடு நான் மீண்டும் இணக்கம் கொள்ளேன். ஆதலால் உன்னை நான் பகிஷ்கரிக்கிறேன். நீ எங்கு வேண்டுமென்றுலும் சென்று, எப்படி

வேண்டுமென்றாலும் வாழ்ந்திருக்கலாம். இது என் ஆணை.''

(அழுது கொண்டிருந்தவள் இப்பொழுது வீராவேசம் பூணுகிறாள்.)

சீதை: "ஆர்ய புத்ரா! தாம் இப்படிப் பேசுவது தம் பண்புக்கு ஒவ்வாது. ஒரு பாமரன் போன்று என்னென்னவோ பதங்களைப் பிரயோகிக்கின்றீர். என் மீது என்ன குற்றத்தைச் சாட்டுகின்றீரோ அந்தக் குற்றத்திற்கும் எனக்கும் வெகுதூரம். மட்பாண்டத்தின் மீது மலம் படிந்தால் அந்த மட்பாண்டம் புறக்கணிக்கப் படுகிறது. ஆனால் ஒரு தங்கத் தாம்பாளத்தின் மீது மலம் படிந்தால் அந்தத்தங்கத் தாம்பாளம் தன் தூய்மையை இழப்பதில்லை. என் தேகம் தங்கத் தாம்பாளத்திற்கு நிகரானது. மானுட வடிவெடுத்துள்ள ஒருத்தி தன் தேகத்தின் தூய்மையை எவ்வளவுதான் பாதுகாத்து வைத்தாலும் எதிர்பாராத இரண்டொரு நெருக்கடிகளில் அவ்வுடல் அழுக்குப் படிந்து போகிறது. அத்தகைய தெளர்பாக்கியத்திற்கு நான் ஆளாகியிருக்கிறேன். இத்தகைய நிகழ்ச்சியைத் தெய்வாதீனம் என்றுதான் இயம்பவேண்டும். எனக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டோ வெறும் துக்கத்திற்கு உட்பட்டதாயிருந்தது. அத்தகைய சங்கடத்தில் மாது ஒருத்தி தன் தேகத்தைத் தியாகம் பண்ணுவதில் வியப்பு ஒன்றுமில்லை. ஒரு நொடிப்பொழுதில் என் உடலை நான் ஒதுக்

கித் தள்ளியிருந்திருக்கலாம். ஆயினும் நான் அப்படிச் செய்யவில்லை. ஏனென்றால் இந்த உடல் எனக்கு உரியதன்று; இது இராமனுக்கு உரியது என்றே நான் இதுகாறும் எண்ணி யிருந்தேன். ஆனால் இப்பொழுது என் எண் ணத்திற்கு நேர்மாறான மொழி இராமன் வாயி லிருந்து வந்துள்ளது. இந்த ஒரு செய்தி மட்டும் ஆஞ்சனேயன் வாயிலாக எனக்கு அனுப் பப்பட்டிருந்திருக்குமாகில் மிக எளிதில் நான் பட்ட துன்பங்களுக்கெல்லாம் விமோசனத்தை நான் கண்டு பிடித்து இருப்பேன். அதுமட்டு மல்ல. எனக்காகவென்று எத்தனை எத்தனை பேர் துயரத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள்; எத் தனை எத்தனை பேர் உயிர் துறந்திருக்கிறார்கள்; இத்தகைய கஷ்ட நஷ்டங்களை யெல்லாம் எளி தில் தவிர்த்திருக்கலாம். உடலில் நான் சிறிது பழுதுபட்டவள் ஆகியிருக்கிறேன் எனினும் என்னுடைய சொரூபத்தில் நான் யாண்டும் தூயவளாகவே இருந்துவருகிறேன். என்னு டைய தூய்மைக்கு நானே அத்தாட்சி. என்னு டைய தூய்மையாலும், திறமையாலும் இந்த இராவணத் துரும்பை நானே சாம்பலாக்கியிருந் திருக்கக்கூடும். ஆனால் அது இராமன் செய்ய வேண்டியசெயல் என்று எண்ணி நான் அடங்கி யிருந்தேன். இப்பொழுது இத்தனைபேர் அறிய இராமன் என்னைத் தனக்கு உரியவள் அல்லள்

என்று ஒதுக்கி வைத்திருக்கிருன். ஆதலால் இந்த க்ஷணத்திலிருந்து இந்த உடல் எனக்குச் சொந்தமாகிறது. இச் சடலத்தை எப்படி வேண்டுமானலும் கையாளுகிற உரிமை எனக்கு உண்டு. இதை நான் அக்னிக்கு இரையாக்கி விடுவேன். என்னுடைய ஆத்மசொருபத்தை இராமன் வடிவிலிருக்கும் பரமாத்மாவின்கண் ஒன்றுபடுத்துவேன். இலக்ஷ்மணு! உன்னுடைய மேன்மைக்கு நிகர் நீயே. நீ யாண்டும் என்னிடத்துப் போற்றுதற்குரிய பெரிய பாங்கிலேயே நடந்துள்ளாய். நீ என்கணவனுகிய இராமனுக்கும், எனக்கும் புரிந்துள்ள பணிவிடை சாமானியமானதன்று. அதைச் சொல்லால் விளக்க யாருக்குமே இயலாது. தயை கூர்ந்து எனக்காக வென்று கடைசி உபகாரம் ஒன்றைச் செய்து வைப்பாயாக; கொழுந்து விட்டு எரிகிற அக்னி ஜ்வாலை ஒன்றை எனக்காக வென்று மூட்டித்தருவாயாக."

(சீதை போகிருள்)

காட்சி 15.

(இராமனுக்கும், விபீஷணனுக்குமிடையில் சம்வாதம்)

விபீஷணன் : "இராமா உன்னை நான் அறம்வளர்த்த நம்பி என்று நம்பியிருந்தேன். எல்லாம் அனர்த்தமாகப்போயிற்று. நட்டாற்றிலே நான் கைவிடப்பட்டவனுகின்றேன்."

இராமன் : "விபீஷணு! உனக்கு நேர்ந்துள்ள நெருக்கடி யாது?"

விபீஷணன் : "அரசன் ஆக வேண்டுமென்று ஆசைப்பட்டு நான் உன்னிடம் வரவில்லை. வலியப் பிடித்து என்னை அரசனுக்கியதின் வாயிலாக நீ என்னை ஏமாளியாக்கி விட்டாய்."

இராமன் : "நீ சொல்லுவது எனக்கு விளங்கவில்லை. உன் கருத்தை நன்கு தெளிவுபடுத்து."

விபீஷணன் : "இலங்காபுரிக்கு கொடியக் கொற்றவனுயிருந்த என் தமையன் சீதாபிராட்டியாரைப் பிடித்து வந்து சிறையில் வைத்தான். இலங்காபுரிக்கு என்னை நீ நல்லரசன்ஆக ஆக்கியிருப்பதாகச்சொல்லுகிறுய். அந்த நல்ல அரசன் திருப்பிக்கொண்டுவந்து உன்னிடம் ஒப்படைத்துள்ள ஜானகி தேவியை நீ அக்னிக்கு இரையாக்கப் போகின்றுய். இது உனக்குப் பொருந்துமா? இந்தக் கொடிய செயலுக்கு நீ என்னை ஒரு

கருவியாகப் பயன்படுத்தியது உன்னுடைய பாங்குக்குப் பொருந்துமா?''

இராமன் : '' இன்னும் ஏதாவது எனக்கு எடுத்துச் சொல்லவேண்டிய விஷயம் உன்னிடத்து உள் ளதா ?''

விபீஷணன் : ''அதைப்பட்டவர்த்தனமாக எடுத்துப் பகர்ந்தால் அது உனக்கும் அவமானம், எனக் கும் அவமானம்; எனக்கு அவமானம் மட்டு மல்ல, ஏமாற்றமாகவும் அமைந்துள்ளது.''

இராமன் : '' தயங்காது அந்தக் குறைநிலைகளையெல் லாம் எடுத்துக்கூறு.''

விபீஷணன்: '' என் தமையனுகிய இராவணனுக்கு நீ நல்லபேர் வாங்கிக்கொடுத்திருக்கின்ருய். என்னை நீ படுபாவி ஆக்கியிருக்கிருய்.''

இராமன் : '' அது எப்படி விளக்கு பார்ப்போம்.''

விபீஷணன் : '' திருமகளின் சொரூபமாகிய சீதா பிராட்டி இலங்கையில் வந்து கண்ணீர் சிந்திக் கொண்டு கதறிப் பதறிக் கிடக்கும்படி என் தமையன் செய்தான். அதன்விளைவாக இலங்கா புரி தன்னுடைய செளபாக்கியத்தைப் படிப்படி யாக இழந்து வந்திருக்கிறது. அது பெரிய நஷ்டமல்ல. ஏதேனும் ஒரு போக்கில் அதைச் சமாளிக்கலாம். ஆனல் தர்மகோப்தாவாகிய நீ இலங்கைக்குள் புகுந்து இதைப் பஸ்பமாக்க துணிந்திருக்கின்ருய். இதுதான் எனக்குப் பெரிய வேதனையைத் தருகிறது.''

இராமன் : "இலங்காபுரி எப்படிப் பஸ்பமாகப் போகிறது? அதைச் சிறிது எடுத்துச்சொல்லு பார்ப்போம்."

விபீஷணன் : "ஜானகி தேவி, ஜகன்மாதா அவளுக்கு ஸ்மசானமாக இந்த இலங்காபுரி அமையுமானால் பிறகு அது யாண்டும் சுடுகாடு ஆகப் போகும். இதுதான் இலங்காபுரிக்கு நீ செய்துள்ள உபகாரம். இராமா! இறுதியாக ஒருவிஷயத்தை நான் உன்னிடம் இங்குக் கூடியுள்ள இத்தனை பேர் அறிய எடுத்து இயம்புகிறேன். சீதாதேவி தீக்கு இரையானால் நானும் மற்றொரு தீ மூட்டி அதில் வீழ்ந்து மடிந்து போவேன். பிறகு உன்னிஷ்டம் போல் சுடுகாடு மயமாயிருக்கின்ற இலங்காபுரியை என்னவேண்டுமானாலும் செய். சீதை மடிந்தபின் நான் உயிர் வாழேன். இது திண்ணம்."

ஆஞ்சனேயன் : "இராமா இந்த நெருக்கடியில் நான் உனக்கொன்று சொல்ல விரும்புகின்றேன். கூர்ந்து கவனித்துக் கேள். அந்தச் சீதா பிராட்டியாரின் தவ மகிமையை நான் அறிந்திருப்பதுபோன்று நீ அறிந்தவனல்லன். இனி நீ அறியப்போவதுமில்லை. சீதாதேவி மட்டும் சீறி எரிந்துகொண்டிருக்கிற தீயினால் தகிக்கப் படுவாளாகில் உன்னை நான் விடமாட்டேன். என் கதாயுதத்தைக்கொண்டு ஒரே அடியில் உன்னை நான் ஒழித்துத்தள்ளுவேன். அன்றொரு

நாள் இந்த இலங்காபுரியில் நான் தீ வைத்துக் கொளுத்தியது அரைகுறைசெயல். அது இராவணனுக்குத் தண்டனையாகச் செய்தது. கற்பே வடிவெடுத்துள்ள காரிகை சீதாபிராட்டியாரைப் புறக்கணித்ததற்குத் தண்டனையாக உன்னை ஒழித்துத்தள்ளி தீ மூட்டும் கிரியையை நான் பூர்த்தி பண்ணுவேன்."

இராமன் : (புன்சிரிப்புடன்)

(விபீஷணனையும் ஆஞ்சனேயனையும் பார்த்துப் பேசுகிறார்கள்.)

"இலங்காபுரி வேந்தா, என் ஆருயிர்த் தோழா ஆஞ்சனேயா! நான் இம்மியளவும் அறநெறியினின்று பிசகியவன் அல்லேன். தர்மத்தைக் காப்பதற்கென்றே நான் தரணியில் வந்துள்ளவன். அதன் விளைவாக நிகழ்வது எதுவானாலும் எனக்குச் சம்மதம்."

காட்சி 16.

(இலக்ஷ்மணன் மூட்டிய தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. சீதாபிராட்டி இராம நாமத்தை உச்சரித்துக்கொண்டு இராமனை வலம் வருகிறாள். இராமன் முன்னிலையில் பஞ்சாங்கமாக வணங்குகின்றாள்.)

சீதை : "அக்னி தேவா! என்னுடைய இந்த ஆக்கை அழுக்குப்படிந்திருக்கிறது எனக்கருதி என்னை என் கணவன் இராமன் பகிஷ்கரித்திருக்கிறான்.

அழுக்குப் படிந்தவைகளையெல்லாம் பொசுக்கிப் பவித்திரப்படுத்துவது உன் செயல். ஆகையால் இதை நான் உனக்கு ஆஹுதியாகப் படைக்கிறேன். தகுந்த பாங்கில் உன் செயலைச் செய்து சாதிப்பாயாக.''

(இராம நாம கோஷம் மண்ணுலகிலும் விண்ணுலகிலும் எதிரொலிக்கிறது. அக்னிதேவன் தீயினின்று வெளியே வருகிறான்.)

அக்னிதேவன் : "இரகுராமா உன்னுடைய சொரூபத்தின் செம்பாதியாகிய சீதாதேவி யாண்டும் தூய்மையே வடிவெடுத்தவள். அக்னிப்பிரளயத்தின் வாயிலாக அண்டங்களைக் கொளுத்தித் தள்ள எனக்கு இயலும். ஆனால் தூயமையைத் தகிக்கும் சக்தி எனக்கு இல்லை. யாண்டும் உனக்குரிய மாதரசியை நீயே ஏற்றுக்கொள்ளுவாயாக.''

(அக்னியில் புதுப்பிக்கப்பட்ட சீதை அக்னியிலிருந்து வெளியே வருகின்றாள். இருகரங்களை நீட்டி இராமன் அவளை ஏற்றுக் கொள்ளுகிறான்.)

வாழ்க சீதா ராமன் ! வாழ்க விபீஷணன் !
வாழ்க விபீஷணன் ! வாழ்க விபீஷணன் !

அழுக்குப் படிந்தவைகளையெல்லாம் பொசுக்கிப் பவித்திரப்படுத்துவது உன் செயல். ஆகையால் இதை நான் உனக்கு ஆஹுதியாகப் படைக்கிறேன். தகுந்த பாங்கில் உன் செயலைச் செய்து சாதிப்பாயாக."

(இராம நாம கோஷம் மண்ணுலகிலும் விண்ணுலகிலும் எதிரொலிக்கிறது. அக்னிதேவன் தீயினின்று வெளியே வருகிருன்.)

அக்னிதேவன் : "இரகுராமா உன்னுடைய சொரூபத்தின் செம்பாதியாகிய சீதாதேவி யாண்டும் தூய்மையே வடிவெடுத்தவள். அக்னிப்பிரளயத்தின் வாயிலாக அண்டங்களைக் கொளுத்தித் தள்ள எனக்கு இயலும். ஆனல் தூயமையைத் தகிக்கும் சக்தி எனக்கு இல்லை. யாண்டும் உனக்குரிய மாதரசியை நீயே ஏற்றுக்கொள்ளுவாயாக."

(அக்னியில் புதுப்பிக்கப்பட்ட சீதை அக்னியிலிருந்து வெளியே வருகின்ருள். இருகரங்களை நீட்டி இராமன் அவளை ஏற்றுக் கொள்ளுகிருன்.)

வாழ்க சீதா ராமன் ! வாழ்க விபீஷணன் !
வாழ்க விபீஷணன் ! வாழ்க விபீஷணன் !

தபோவனத் தொடர் 107

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115
திருச்சி ஜில்லா

விலை ரு. 1-50